[2nd March 1965

Chief Ministers' deliberations on communal parties' activities

* 124 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the conclusions reached at the conference of the Chief Ministers of States held at New Delhi on 14th December 1964 to curb the activities of communal parties?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Government decline to answer the question in public interest.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, அந்த மகாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் இரகசியமாக இருக்கலாம். அந்த மகாநாட்டில் நடந்த விவாதத்தைப் பற்றியும் குறிப்பிடவில்லை. வகுப்புவாதம் பரப்பப்படுவதை தடுக்கவும், வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்தவும் என்ன . என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது பற்றித்தான் நான் கேட்டேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த மாதிரியான ம்காநாடுகளின் மூலம் முடிவு ஏற்பட்டால் அதைத் தெரிவிக்கலாம். அதில் ஆட்சேபணை இல்லை. ஆனல் அங்கே என்ன பேசப்பட்டது, என்ன விவாதிக்கப்பட்டது என்றெல்லாம் சொல்வதற்கில்லை.

Cloth Control Scheme

* 125 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pelased to state :—

(*a*) the details of the cloth control scheme introduced recently in so far as it relates to this State ; and

(*b*) the steps taken to ensure adequate supply of controlled categories of cloth in the State?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement (*a*) is placed on the table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த அறிக்கையின்படி நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்கப்படுகிறதா என்பதைப் பரிசிலனை செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த மாதிரி புகார் வந்தால் அதை உடனே பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விலைக் கட்டுப்பாட்டுக்கு அதிகமாக விற்காமல் இருப்பதற்கு அகில இந்தியக் கமிட்டி ஒன்று போட்டு இருக்கிறோம்.

Industrial Seminars

* 126 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the names of the districts where industrial seminars have been held and action taken on the resolution of those seminars?

Printed as Appendix on pages 218–220.

2nd March 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : Industrial seminars were held in Madurai, Ramanathapuram, North Arcot and Salem districts and possibilities of further industrial development in these districts were discussed. No resolutions as such were passed at the seminars.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த அரங்கில் மதுரை சம்பந்தமாக என்ன என்ன தொழில் ஆரம்பிக்க வாய்ப்பு இருக்கிறது என்று பேசப்பட்டது. அப்படி என்றால் அவைகளை ஆரம்பிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஒரு புத்தகம் போட்டு இருக்கிறோம். கனம் அங்கத்தினர் அதைப் படித்துப் பார்த்தால் விவரங்கள் எல்லாம் தெரிந்து கொள்ளலாம்.

State Farms

* 127 *Q*.—SRI A. K. SUBBIAH : Will the Hon. the Minister for Home be pleased to state :—

(*a*) whether there is any proposal to start big State Farms on the model of Suratgarh Farm in Rajasthan in this State; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No Sir.

(*b*) Does not arise.

திரு. ஆ. கு. சுப்பையா: தஞ்சை மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரா சர்க்கார் நிலம் தரிசாகக் கிடக்கிறது. அவற்றிலும் இம் மாதிரி பண்ணை வைக்க அரசாங்கம் யோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் விதைப் பண்ணை வைப்பதற்கு லாயக்கான நிலம் இருக்கிறதோ அங்கெல்லாம் வைக்க கவனம் செலுத்தப்படும்.

திரு. க. ர. நல்லசிவம்: ஜப்பானிய விவசாய முறை சம்பந்தமாக விவசாயிகளுக்கு மத்தியில் பல வருடங்களாகப் பேசப்பட்டு வருகிறது. ஆனால் அதன்படி என்ன காரியங்கள் செய்தார்கள் என்று தெரியவில்லை. சமீபத்தில் இந்த மாதிரி ஒரு பண்ணையை ஆந்திர சர்க்கார் ஜப்பானிய ஒத்துழைப்புடன் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகிறது. அதே மாதிரி ஜப்பானிய அரசாங்க உதவியுடன் இங்கேயும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : ராஜஸ்தான் பண்ணை மாதிரி இங்கேயும் ஏற்படுத்த மத்திய அரசாங்கம் ஆலோசனை கேட்டது. அங்கு கிடைத்தது போல இங்கேயும் அதிகமாக நிலம் கிடைக்குமா என்று பரிசீலனை செய்யப்பட்டது. அங்கே 30 ஆயிரம் ஏக்கர் எடுத்திருக்கிறார்கள். அந்த மாதிரி இங்கே கிடைக்கவில்லை. பத்தாயிரம் ஏக்கராவது கிடைக்குமா என்று பார்த்தார்கள், அதுவும் கிடைக்கவில்லை. எங்கெல்லாம் நிலம் கிடைக்கிறது என்று பார்த்து இந்தப் பண்ணை ஏற்படுத்தப்படும். 210. விதைப்